# 31ம் நாள் நினைவு மலர்




## அமரர்.திருமதி.திருப்பதி மகேந்திரன்

(கோவில்போரதீவு)

**31.01.2025**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ம் நாள் நினைவு மலர்
## 2025.01.31 ம் திகதி வெள்ளிக்கிழமை



பிறந்த நாள்
1974.03.03

மறைந்த நாள்
2025.01.01

### திதி வெண்பா

" புகழ் பூத்த குரோதி வருடம் மார்கழித் திங்கள்
சீர் நிறைந்த வளர்பிறை துதியை திதிதனிலே
பேர்பூத்த உத்தமியாம் – திருப்பதி
பாரை விட்டு பரந்தாமன் திருவடி சேர்ந்த நன் நாள் "

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் அன்பு அன்னைக்கு சமர்ப்பணம்

அன்னை எனும் சொல்லிற்கு
இலக்கணமாய் வாழ்ந்து காட்டி
அன்பு, வாய்மை அது தவறாமல்
ஆன்மீக வழியும் காட்டி

குடும்ப விளக்காய், குல தெய்வமாய்
இல்லத்தில் வீற்றிருந்து இன்முகத்தோடு
அரவணைத்து
பொய்மை எனும் உலக வாழ்வை
மெய்யாக்கிவிட்ட
எங்கள் இதய தீபம் திருப்பதி
தாயாருக்கு அவர் தம்
நினைவுகளை சுமந்து வரும்
மலர்தனை கண்ணீர் மலர் தூவி
அஞ்சலி செய்தே அன்னாரின்
பாதக்கமலங்களில் சமர்ப்பணம் செய்கின்றோம்



**உன் பிரிவால் வாடி நிற்கும்**
**கணவன், பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரக்குழந்தைகள்**
**சகோதரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

கணபதி துணை

## விநாயகர் துதி

முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய்மெய்ச் சுகந்தவனே மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின் தாள் சரணம்!

## தேவாரம்

திருச்சிற்றம்பலம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா
றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள்
ஆவடு துறையரனே..

## திருவாசகம்

கடையவ னேனைக் கருணையி
னாற்கலந் தாண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண்
டாய்விறல் வேங்கையின்தோல்
உடையவ னேமன்னும் உத்தர
கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி
ரான்என்னைத் தாங்கிக்கொள்ளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

செங்கணா போற்றி திசைமுகா போற்றி
சிவபுர நகருள் வீற்றிருந்த
அங்கணா போற்றி அமரனே போற்றி
அமரர்கள் தலைவனே போற்றி
தங்கள் நான்மறைநூல் சகலமும் கற்றோர்
சாட்டியக்குடி இருந்தருளும்
எங்கள் நாயகனே போற்றி ஏழிருக்கை
இறைவனே போற்றியே போற்றி.

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம் பத்தர்கள்
வஞ்சகர் போயகலப்
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனியெல் லாம்விளங்க
அன்ன நடைமட வாள்உமை கோன்அடி
யோமுக் கருள்புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த பித்தற்குப்
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்பவன்பு வேண்டிப்பின் வேண்டுகிறார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டே லுன்னை யென்றும்
மறவாமை வேண்டும்மென்றும் வேண்டும் நான் மகிழ்ந்துபாடி
அறவாநீ யாடும்போ துன்னடியின் கீழிருக்க வென்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

நாத விந்துக லாதீ நமோநம
வேத மந்த்ரசொ ரூபா நமோநம
ஞான பண்டித ஸாமீ நமோநம ...... வெகுகோடி

நாம சம்புகு மாரா நமோநம
போக அந்தரி பாலா நமோநம
நாக பந்தம யூரா நமோநம ...... பரசூரர்

சேத தண்டவி நோதா நமோநம
கீத கிண்கிணி பாதா நமோநம
தீர சம்ப்ரம வீரா நமோநம ...... கிரிராஜ

தீப மங்கள ஜோதீ நமோநம
தூய அம்பல லீலா நமோநம
தேவ குஞ்சரி பாகா நமோநம ...... அருள்தாராய்

ஈதலும்பல கோலா லபூஜையும்
ஓத லுங்குண ஆசா ரநீதியும்
ஈர முங்குரு சீர்பா தசேவையு ...... மறவாத

ஏழ்த லம்புகழ் காவே ரியால்விளை
சோழ மண்டல மீதே மநோகர
ராஜ கெம்பிர நாடா ளுநாயக ...... வயலூரா

ஆத ரம்பயி லாரூ ரர்தோழமை
சேர்தல் கொண்டவ ரோடே முனாளினில்
ஆடல் வெம்பரி மீதே றிமாகயி ...... லையிலேகி

ஆதி யந்தவு லாவா சுபாடிய
சேரர் கொங்குவை காவூர் நனாடதில்
ஆவி னன்குடி வாழ்வா னதேவர்கள் ...... பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்து

மறையொரு சைவம் வாழ்க
மானிலம் செழித்து வாழ்க
கறைமிடற் றண்ணலார் தம்
அடியவர் இனிது வாழ்க
பொறையொடு வாய்மை போற்றி
புவியினில் மாந்தரெல்லாம்
பிறை தவழ் சடையனாரின் அருளினாலே
நீடு வாழ்க...

**திருச்சிற்றம்பலம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

சீரும் சிறப்பும் உற்ற பெரும்பதியாம் கோவில்போர-தீவில் இல்லத்தரசியாக பண்பும் பக்தியுமுள்ள எமது உறவுகளில் ஒருவரான உத்தமி திருப்பதியின் ஆத்மா எல்லாம் வல்ல அன்னை பராசக்தி கண்ணகி, முருகப் பெருமானின் அருள் நோக்குடன் இறைபதம் அடைய பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அர்ச்சகர்
தம்பையா - புண்ணியமூர்த்தி
(ஸ்ரீ கண்ணகி அம்மன் ஆலயம், கோவில்போரதீவு,
மட்டக்களப்பு ஆதார வைத்தியசாலை
உத்தியோகத்தர்)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

வெள்ளை நாவலம்பதியாம் கோவிலூர் பெரும் பதியில் முன்னவராம் வினாயகரும் முத்தமிழ் முருகன் சித்திரவேலரும் அன்னை பராசக்தி கண்ணகியும் அருள்வளமும் நிறைந்த பதியிலே திருப்பதி எனும் தாயாரின் ஆத்மா எல்லாம் வல்ல பரம் பொருளை வேண்டி இறைபதம் அடைய வேண்டும் என பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**க.தினகரன்**
**வண்ணக்கர்**
**ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி ஆலயம்**
**கோவில்போரதீவு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைக் குறிப்பு

மட்டக்களப்பு, கோவில்போரதீவு கிராமத்தில் குஞ்சித்தம்பி அல்லிமுத்து தம்பதி அவர்களுக்கு, ஜெயசீலன், திருப்பதி, நேசமலர், சந்திரா ஆகியோரின் இரண்டாவது புத்திரியாக திருப்பதி எனும் நாமத்தோடு வளர்ந்து அன்பு, பண்பு, கருணை உள்ளத்தோடு வாழ்ந்து வந்தார்.

இல்லற வாழ்விற்கு நாகமணி மகேந்திரன் என்பவரை திருமணம் செய்து வழமாக வாழ்ந்து தனுஷியா, அனோஜா, மதுஜன் என முக்கனிபோல் மூவரை பெற்று வளர்த்து வாழவைத்த பேரப்பிள்ளைகள் கஸ்னிகா, பிரதீஸ், விகாஸ்மிகா பெருந்தகை "திருப்பதி" வெங்கடேசப் பெருமான் சிறிமன் நாராயணமூர்த்தியின் பரமபதம் 2025.01.01ம் நாள் வளர்பிறைக்காலம் துதியைத் திதியில் அமரத்துவமடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திப்போமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாசமலரே திருப்பதி...!

மீன்பாடும் தேன் நாடாம் மட்டக்களப்பின் வெள்ளை நாவலம்பதியாம் எனப் போற்றப்படும் கோவில்போரதீவு செந்நெல்லும் தேங்கும் கமுகும் கதலியும் செழித்தோங்க மும்முனையும் முக்குளம் சூழ்ந்து அல்லியும் மலரும் அழகுசூழ் மிகு ஊராம் போர் ஏறு தீவில் கலிங்க குல மாதரசி திருப்பதி அவதரித்தாள்

நல்லொழுக்கம், பண்பு, அன்பு, அறம் இறைபக்தியோடு வாழ்ந்து இல்லறத்துக்கு வாய்த்த மணவாளனாக நாகமணி - சுந்தரம் அவர்களின் சிரேஸ்ட புத்திரன் மகேந்திரன் அவர்களை கரம்பிடித்து வாழ்ந்து முக்கனி போல் மூவரை பெற்று வளர்த்த அன்னை திருப்பதி மகள் பரந்தாமன் பரமபதம் அடைந்தார் எனும் செய்தி 2025.01.01ம் திகதி முன்னிரவு 11.00 மணிக்கு தகவல் அறிந்து எங்கள் குடும்பம் ஆற்றொண்ணா துயரத்தில், துன்பத்தில், கவலையில் வாடினோம் திருப்பதி மகளின் ஆத்மா என்றென்றும் சாந்தி பெற்று இறைவனடி சேர பிரார்த்திக்கின்றோம்.

*வெற்றிவேல் - புனிதவதி குடும்பம்*
*சித்தி, சித்தப்பா - மதி ராஜமோகன்*
*மதன் - கோவில்போரதீவு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்புத்தாய், சகோதரர்கள் ஆற்றாத்துயரில் அழுது புலம்பல்

இளையதம்பி- பாக்கியம் அவர்களின் குடும்பத்தில் சிரேஸ்ட புதல்வி அல்லிமுத்து அவருடன் சகோதரர்கள் சிவலிங்கம், சிவனேசராசா, புனிதவதி, புவனேந்திரன், விஸ்வலிங்கம், எதிர்மன்னசிங்கம், திருச்செல்வம், பாக்கியராசா எனும் புத்திரர்களுடன் அல்லிமுத்து வளர்ந்து வாழ்ந்து வந்த போது குஞ்சித்தம்பி என்பவரை கணவராக ஏற்று வாழ்ந்த போது குழந்தைபேறு இல்லாது வருந்திய தாய் தந்தையார் இளையதம்பி பாக்கியம் அவர்கள் இறைவனை வணங்கி நேர்த்தி வைத்து குழந்தை கிடைத்தது அதற்கு நாமம் சூட்ட இளையதம்பி அவர்கள் ஸ்ரீமன் நாராயணமூர்த்தியின் பெரும் பேறாக சிந்தித்து "திருப்பதி" என்று பெயரை சூட்டினார்.

செல்வப் பெருமகளாய் வளர்ந்து வாழ்ந்து ஆரம்பக்கல்வியை தொடர்ந்து வந்தவர் பின்பு பருவ வயது வந்ததும் பாடசாலை செல்லாமல் விட்டு தனது தாய்க்கு உதவி செய்து பராமரித்து வந்தார். தாய் தந்தையார் திருப்பதி மகளை அன்போடும் ஆதரவோடும் வளர்த்தார்.

சகோதரர்கள் மகேந்திரன் (ஜெயசீலன்) , சந்திரா, நேசமலர் ஆகியோர்கள் பாசமிகுந்தவர்கள். ஒன்றுகூடி அன்போடும் பாசமோடும் ஒற்றுமையாகவும் வாழ்ந்தனர். பிள்ளை திருப்பதி என மகேந்திரனும் மற்றை சகோதரர்கள் அக்கா என மதிப்பு கொடுத்து திருப்பதி அவர்கள் கதைக்கும் போது குடும்ப சமேதரருடன் சில காரியங்களுக்கு சிரிப்புடன் தலையை ஆட்டி பேசிபுன்னகையோடு அந்த குரல் தனியான ஓசையாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தக் கருமமாய் இருந்தாலும் அதற்கு தடையில்லாமல் ஒத்துழைப்பு வழங்கி அக்காரியத்தை முடித்துதான் அவ்விடத்தில் இருந்து அகலும் சமயச் சடங்குகளில் தூய்மையாக வந்து செய்வதும் அவ்வேளையில் மற்றவர்களுக்கு அலுப்பு வராமலும் அவர்களை உற்சாகப்படுத்தி பல வேடிக்கைகளை சொல்லி சிரித்து அதுவும் பலருக்கு திருப்பதியின் செயல்கள் நன்கு சமுகத்தில் எடுபட்டதாக இருந்தது இவற்றையெல்லாம் நான் எங்கு மகளே பார்ப்பேன் என அழும் தாயாரும் சகோதரர் மகேந்திரன் பிள்ளை எனும் பாசத்தோடு வளர்த்தேன் பார்த்தேன் இனி எப்பிறப்பில் காண்பேன் என ஏங்கி அழுது புலம்புவதும் சந்திரா, நேசமலர் சகோதரர்கள் வாழ்ந்த காலம் அதன் மகிமை எல்லாம் நோயுற்றபோது எண்ணி எண்ணி மனம் நொந்து வருந்தி ஏங்கித் தவிப்பதும் எப்போதும் நீங்காது. நாங்கள் ஏது செய்வோம் இழந்து விட்டோம் இறைவா எங்கள் திருப்பதியை உங்கள் திருவடியில் இணைத்து அன்னாரின் ஆத்மா சாந்தி பெற வேண்டுகின்றோம்.

**அன்புத்தாய்**
**அல்லிமுத்து,**
**சகோதரர்கள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் அன்புக்கு ஏங்கும் உன் "குழந்தைகள்"

*பெரியம்மா! பெரியம்மா என்று இனி யாரை அம்மா அழைப்போம் பெரியம்மா என்றாலே எங்களுக்கு நீ மட்டும் தானே அம்மா பெரியம்மா என்று அழைப்பதற்கு இனி வழி இல்லாமல் ஆகி விட்டதே அம்மா!*

*எங்களது எதிர்கால கனவு சந்தோசம் எல்லாவற்றையும் காணாமலே போனதேனம்மா!*

*ஒரு நாளிலே காலை, மதியம், மாலை என மூன்று நேரமும் தவறாமல் எங்களை பார்க்க ஓடி வந்துடுவாயே அம்மா எங்களை பார்க்காமல் ஒரு நாள் கூட இருந்ததில்லையே அம்மா!*

*கார்த்திகை 30ம் திகதி அன்று 7.00 மணிக்கு வந்து எங்களுடன் விளையாடி பகிடி செய்து செல்லக்கதைகள் பேசி மகிழ்ந்து சிரித்த சிரிப்பு இன்னும் எங்கள் மனதை விட்டு அகலவில்லையம்மா!*

*நீ சிரித்த சிரிப்பும் செல்லக்கதையும் நீ நடந்த நடையும் கடைசி வழி என்று அப்பொழுது நாங்கள் உணரவில்லையம்மா இப்பொழுதுதான் உணர்கிறோம் உன் கடைசி வழி என்று அம்மா!*

*உனக்கு மூன்று பிள்ளைகள் இருந்தாலும் நாங்கள் உன் விளையாட்டு குழந்தைகள் அல்லவோ அம்மா எங்களுடன் சிரித்து விளையாட தினம் தினம் ஓடோடி வந்திடுவாயே அம்மா*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1ம் திகதி நீ எங்களுக்கு தந்த அதிர்ச்சி பேரதிர்ச்சி அம்மா எங்களை அதில் இருந்து மீளவைத்தது உன் புன்சிரிப்பும் உற்சாகமும் உறுதியான பேச்சு மட்டுமே அம்மா

நீ வந்திட வேண்டுமென்று நாங்கள் வணங்காத தெய்வமில்லையம்மா வைக்காத நேர்த்தி இல்லையம்மா எல்லாவற்றையும் பொய்யாக்கி அடுத்த 1ம் திகதி 10.20 க்கு பறந்ததென்னமா நீ!

10.30 க்கு இறந்த செய்தி கேட்டு எங்கள் குடும்பமே நிலைகுலைந்து சரிந்து விட்டதே அம்மா இதிலிருந்து எப்படி அம்மா மீளுவோம் இனி நீ சென்றாலும் உன் நினைவிலே ஆழ்ந்திருப்போம் அம்மா!

பாசமிகு பேரமக்கள்
கோ. சுதர்மீனா
கோ. சுதர்ஷனா
ர. புலோத்தமன்
ர. சஷாங்கனி
ர. பிறக்ஷனா
வி. கானுஜன்
வி. சிவானுஜன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் வருவாயா பெரியம்மா..!

கோவிலூர் முத்தொன்று எமை விட்டு சென்றதுவோ விண்ணுலகன் சதியாலே மண்ணுலகைத் துறந்தாயே!

முத்தானா முத்தழகி முழுவழகு நிலவழகி வித்தாகிப் போனாளே வெடிக்குதம்மா எம்மிதயம்!

மாயையின் மறைவிலே மறுபடியும் உனைக்காண மனம் ஏங்குதே தினம் தினம்!

மனதார மகளாக எங்களை நீ அரவணைத்த அர-வணைப்பு எங்களை வாழ்நாளும் தொடராதோ?

உன் ஆத்மா என்றென்றும் இறை அடியில் சாந்தி பெற இறைவனையே வேண்டுகின்றோம்!

**பெறாமக்கள்**
கோ. சுதர்மீனா
கோ. சுதர்ஷனா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் நெஞ்சைவிட்டு அகலாத அக்கா..!

எங்கள் குடும்பத்தின் ஆணிவேரே!
கண்மூடி முழிக்கும் முன்னே எம்மை
கடந்து சென்றாயோ? அக்கா
எங்கள் குடும்பத் தலைவியாக வழி
நடத்தி சென்றாய் நீ!

என்றென்றும் எங்களுடன் இணைந்திருப்பீர்கள்
என எண்ணிலாக் கனவு கண்டிருந்தோம்!
இடை நடுவில் எம்மைத் தவிக்கவிட்டு
ஏன் அக்கா மறைந்து விட்டீர்கள்?
காலன் உங்களை காலத்தால் அழைத்தவேளை
அத்துன்பத்தை ஏற்றுக்கொள்ள எம் மனத்தால்
முடியவில்லை!

விதிசெய்த சதிதானே என்று எம் மனது
எண்ணினாலும் எம்வாழ்வுள்ளவரை
நிழலாய் நீங்கள் தொடர்வீர்கள் அக்கா!
கல்லறை வாழ்வில் நெடுங்காலம் சென்றாலும்
எங்கள் நெஞ்சறைக்கூட்டில் அழியாத
ஓவியம் அக்கா நீங்கள்
உங்கள் ஆத்மா சாந்தி பெற
திருப்பதி வெங்கடேஸ்வர பெருமாளின்
கமலங்களை அடைய பிராத்திப்போமாக.

**சகோதரர்கள்**
**மதிவதனி, இராஜமோகன், மகீரதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமகளே..!

மருமகளே எங்களுக்கு அன்பாய் வந்த செல்லம் நீ பொன்னாய் மணியாய் புகழ்ந்து போற்றும் பெரு நிதியாய் அருமையாக எங்களை சீர்துவங்கி பேணும் திருப்பதியே சீரோங்கும் கலிங்கர் குலச் செல்வத்திருமகளாய் பெருமையாக எல்லோரும் பாரினிலே திருப்பதியை புகழ்ந்து ரைப்பர்

கண்ணீரில் எமை ஆழத்திக் கடவுளடி சேர்ந்தாயே மீளாத் துயில் கொண்டாய் எம் மருமகளே எமை மறந்து ஆறாக் கண்ணீரை அனைவருமே வடிக்கின்றோம் கேளாத தூரம் கிட்டியதாய் நின் ஆத்மா 'கேளாது எம் குரலும் கிட்டே வந்து கேட்டிடாமால் கோளாறு செய்த கொடுங் கோலன் காலன் கோடி பணம் கொடுத்தாலும் கொடுப்பான உனை மீண்டும்

நாங்கள் வரும் போதெல்லாம் எமை ஆதரிப்பாய் எப்போதும் மறவாமல் எண்ணியே கதைத்திருப்பீர் பொங்கும் அலைகடலாய் புரண்டாலும் எம் மிதம் எங்களோடு வாழ்ந்த நாட்களை எண்ணியே நினைத்திருப்போம்.

*இ.சிவலிங்கம் குடும்பம்*
*ஓய்வுநிலை ஆசிரியர்*
*கல்லடி, மட்டக்களப்பு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனம் திறந்த மாமியாரின் பிரிவால் துயருறும் மருமக்களின் கண்ணீர் துளிகள்

தாயாக, மாமியாக வளர்த்த அன்னையே சேயாக எங்களை நேசித்த அன்பு மாதா மரியாதையாகப் பேசி வாழ்வழித்த தாயே! மாமனாருக்கேற்ற மனைவியே மீண்டும் எங்களுக்குத் துணையிருப்பாய் ஊரோடும் உறவோடும்வாழ்ந்தாய்யாரோடும்பகைக்காமல் வாழ்ந்தாய்! சீறிப்பாயும் மாமியும் இல்லை சினந்து கதைப்பதும் இல்லை சிரிப்புக் காட்டி சிறப்பிப்பாய் ஆறிப்போன உளம் உனக்கு ஆற்றொணாத் துயரம் எங்களுக்கு என்றென்றும் சிந்திக்க உள்ளதே. எம் பராபரனே தன் நிழலில் சேர்ப்பாயே!

ஓம் சாந்தி!

*உன் குடும்ப மருமக்கள்*
க.பரமேஸ்வரன்
நே.லோகிதன்
ஜெ.செல்வி
த.சனோஜா
பா.சோக்கியன்
பா.டிலக்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்களின் மனக்குமுறல்

மாமி! நீங்கள் எங்களை மிக விரைவில் விட்டு இறைவனிடத்தில் சங்கமமாவீர்கள் என்று ஒரு போதும் நினைக்கவில்லை உங்களின் மரணச் செய்தி கேட்டு நாங்கள் எல்லோரும் துடிதுடித்து போயிற்றோம் எங்களுடைய மனது இன்றும் நீங்கள் இவ்வுலகில் இல்லை என்பதை ஏற்க மறுக்கிறது. நாங்கள் பிறந்தது முதல் உங்களை பார்த்து வளர்ந்த எங்களுக்கு உங்களின் மறைவு எங்களின் உடம்பிலிலுந்து எதையோ இழந்தது போல் ஓர் உணர்வு தோன்றுகிறது.

எங்களின் நன்மை தீமைகளில் பங்கு வகித்து தலைமை தாங்குவீர்கள் இனிமேல் உங்களைப்போல் செயற்படுத்த யாரும் இல்லாதது போல் ஒரு பாரிய வெற்றிடமாக எங்கள் வாழ்வில் உள்ளது.

இயற்கையின் விதியை யாராலும் மாற்ற முடியாது உங்களுடைய ஆத்மா எங்களை எப்பவும் ஆசிர்வதிக்க வேண்டும் இறைவனின் பாதங்களில் சங்கமமாக வேண்டுமென்று நாங்கள் அனைவரும் இறைவனை வேண்டி நிற்கின்றோம்

**கண்ணீர்த்துளிகளுடன்**

ஜெ.சுலர்ஷனா, ஜெ.ரஜிதா, ரா.துவர்ணா, ம.கிருஷ்சிவன், ம.யுகிவர்ஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மைத்துனர்கள் மனக்குமுறல்

அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது
என்றாள் ஔவையார் அதற் கொப்பா
புகழ் கொண்டு வாழ்ந்து உன் கடமைகளை
சீக்கிரமே முடித்து பாருலகம் சென்று விட்டாயே மச்சாள்

உன் வீட்டுக்கு வருவோரை இன்முகத்தோடு
வாவாவென்று வரவேற்று உபசரிக்கும்
உன் நற்குணத்தை இனி எங்கு காண்போம்

எங்கள் வீட்டில் எந்த நிகழ்வு நடந்தாலும்
அதற்கு நீதானே தலைமை தாங்கி மிக
விரைவாக செய்து முடிப்பாயே மச்சாள்

இனி உன்னை போன்ற மச்சாளை எங்கு
கண்டெடுப்போம் உன் பகிடிக்கதைகள்
உன் சிரிப்புக்கள், பேச்சுக்கள் எல்லாம்
இனி எங்கு காண்போம்

நீ இவ்வுலகம் விட்டு அவ்வுலகம் சென்றாலும்
உன் ஆத்மா என்றென்றும் பரந்தாமன்
பாதமதில் சரணடைய வேண்டுகின்றோம்

**மைத்துனர், மைத்துனிகள்**
**சா.கோபாலபிள்ளை**
**வ.ரதியானந்தம்**
**ஜெ.சுகிர்தா**
**சோ.வினாயகராசா**
**ரா.ஜீவா**
**ம.கிரியங்கா(லண்டன்)**
**பா.புஸ்பவதி**
**நா.கிருபைராசா**
**நா.சிவகுருநாதன்**
**நா.பாஸ்கரன்**
**நே.தங்கேஸ்வரி**
**க.சாந்தினி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறக்க முடியவில்லையே மருமகள்

அன்பே வடிவான திருப்பதி மருமகளே
இனி உன் அன்பை எங்கே காண்போம்

காலனவன் உன்னை எங்களிடமிருந்து
பிரித்துக் கொண்டு அவனடியில் சேர்த்துவிட்டானே

இதை எண்ணி எண்ணி எங்கள் மனம் தவிக்கின்றதே
மகளே நாங்கள் முதல் முதல் கண்ட மருமகள் நீ
தானே மகளே

நீ பிறந்த நாள் முதல் நாங்கள் தோளில் சுமந்து
உம்மை அரவணைத்து அன்பு காட்டி வளர்த்தோமே

இன்று அதை எல்லாம் எண்ணி எண்ணி எங்கள் மனம்
கலங்கித்தவிக்கின்றதே மகளே

மாமா என்று எங்களை நீ அழைப்பதை கேட்டாலே
எங்களுக்கு ஆனந்தமே மகளே

இனி மாமா என்று அழைக்கும் உன் குரலை எங்கு
கேட்போம் மகளே

உன் ஆத்மா என்றென்றும் இறையடியில் சாந்தி
பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

**பாசமிகு மாமன்மார்கள்**
**இ.புவனேந்திரன்**
**இ.விஸ்வலிங்கம்**
**இ.பாக்கியராசா (பிரான்ஸ்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவேக சிந்தாமணி

## தோற்றப் பா

பிறப்புக்கு உண்டு இறப்பென்றும் முடிவதனால்
உரக்க அழுது புலம்புவதால் என்ன பயன்
மறப்பதொன்றே கடவுள் கொடை கண்டுணர்ந்து
கடவுளடி தான் தொழுதோம் கடவுளே தாய் உயிரைக் கார்!

## சிவமயம்

மட்டக்களப்புக்கு தென்புறமாக அமைந்திருக்கும் பழங்குடியினர் வாழ்ந்து வரும் கோயில் போரதீவில் காலம் சென்ற திருமதி திருப்பதி என்பவர் முதன்மை பெறு கலிங்கக் குடியில் குஞ்சித்தம்பி அல்லிமுத்து என்பவர்களுக்கு மகளாகப் பிறந்து நாகமணி மகேந்திரன் என்பவரை மணவாளனாகப் கைப்பிடித்து சீரும் சிறப்புமாக வாழ்ந்து தனது 49வது வயதில் சிவபதமடைந்தார். இவருக்காகவும் இவரது ஞாபகத்துக்க-ாகவும் சில பொருள் மிகு பாடல்களை கீழே தருகின்றேன்.

## பயனற்ற ஏழு

ஆபத்துக்கு தவாப்பிள்ளை
அரும்பசிக்கு உதவா அன்னம்
தாகத்தை தீராத் தண்ணீர்
தரித்திரம் அறியாப் பெண்டீர்
கோபத்தை அடக்கா வேந்தன்
குருமொழி கொள்ளாச் சீடன்
பாவத்தைத் தீராத் தீர்த்தம்
பயன் இல்லை ஏழுந்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செயல் முடிவில் பயன் பாடாதவர்கள்

பிள்ளைதான் வயதில் மூத்தால்
பிதாவின் சொற்புத்தி கேளான்
கள்ளின் நல் குளலாள் மூத்தாள்
கணவரைக் கருதிப்பாராள்
தெள்ளற வித்தை கற்றால்
சீடனும் குருவைத் தேடான்
உள்ள நோய் பிணிகள் தீர்ந்தால்
உலகர் பண்டிதரைத் தேடார்

## அன்பற்ற விருந்தின் இயல்பு

ஒப்புடன் முகம்மலர்ந்தே
உபசரித் துண்மை பேசி
உப்பில்லாக் கூழிட்டாலும்
உண்பதே அமிர்தமாகும்
முப்பழமொரு பால் அன்னம்
முகம் கடுத்திடுவராயின்
கப்பிய பசியினோடு
கடும் பசி ஆகும் தானே.

## செல்வத்தின் சிறப்பு

ஆலிலை பூவும் காயும் அளி தரு பழமும் உண்டேல்
சாலவே பட்சி எல்லாம் தம்குடி என்றே வாழும்
வாலிபர் வந்து தேடி வந்திப்பார் கோடி கோடி
ஆலிலை ஆதி போனால் அங்கு வந்திருப்பார் உண்டோ.

## விரைவில் அழிந்து போகத்தக்கவை

மூப்பில்லாக் குமரி வாழ்க்கை முனை இலா அரசன் வீரம்
காப்பிலா விளைத்த பூமி கரையிலாது இருத்த ஏரி
கோப்பிலான் கொண்ட கோலம் குருவிலான் கொண்ட ஞானம்
ஆப்பிலா சகடுபோல அழியுமென்று ரைக்கலாமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயனளிக்காதவை

சந்திரனில்லா வானம் தாமரை இல்லாப் பொய்கை
மந்திரியில்லா வேந்தன் மதகரி இல்லச் சேனை
சுந்தரப்புலவர் இல்லாத் தொல்சபை சுதர் இலா வாழ்வு
தந்திகள் இல்லா வீணை தனமில்லா மங்கை போலாம்

## அறிவில்லாதவர் இயல்பு

தன்னைத்தான் புகழ்வோனும் தன்குலமே
பெரிதென்று சொல்வோனும்
பொன்னைத்தான் தேடி அறம் புரியாமல்
அவை கார்துப் பொன்றினொரும்
மண்ணைப்போல் மனையாளை வீட்டில் வைத்து
வேசை சுகம் விரும்புவோரும்
அன்னை பிதா பாவலரைப் பகைப்போரும்
அறிவில்லாக் கசடராமே

## இலக்குமி நீங்குவாள்

காலை மாலை உறங்குவர் காரிகை
கோலமேனி குலைத்தபின் கூடுவர்
சாலி இராத் தயிர் சாதமோடுண்பவர்
மாலைநேரினும் மாது பிரிவளே
சுபம்

**தொகுப்பு : பு.வெற்றிவேல் (கோவில்போரதீவு)**
**ஓ.பெ.கிளை முகாமையாளர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டாள் திருப்பாவை

1. மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை, ளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாரா யணனே, நமக்கே பறைதருவான்.
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்.

2. வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யுங் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி,
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்
செய்யா தனசெய்யோம் தீக்குறளைச் சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.

3. ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள் நம் பாவைக்குச் சாற்றிநீர் ஆடினால்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப,
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4.ஆழி மழைக்கண்ணா! ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

5.மாயனை மன்னு வடமதுரை மைந்தனை.
தூய பெருநீர் யமுனைத் துறைவனை.
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்த தாமோதரனை,
தூயோம்ஆய் வந்துநாம் தூமலர் தூவித்தொழுது
வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப்
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்
தீயினில் தூசுஆகும் செப்பேலோ ரெம்பாவாய்.

6.புள்ளும் சிலம்பினகாண் புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத்தரவில் துயிலமர்ந்த வித்தினை.
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. கீசுகீசென்றெங்கும் ஆனைச்சாத் தன்கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசை படுத்தத் தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய்.

8. கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான் போகின்றாரைப் போகாமல் காத்துன்னைக்
கூவுவான் வந்து நின்றோம். கோதுகலமுடைய
பாவாய்! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநடம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

9. தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூமங் கமழத் துயிலணைமேல் கண்வளரும்
மாமான் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்
மாமீர்! அவளை எழுப்பீரோ? உம்மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
"மாமாயன், மாதவன், வைகுந்தன்" என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ வாசல் திறவாதார்?
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றம் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தேற்றமாய் வந்து திறவேலா ரெம்பாவாய்.

11. கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து.
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்,
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்லப்பெண் டாட்டிநீ
எற்றுக் குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்.

12. கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசல் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும்நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்?
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. புள்ளின்வாய் கீண்டானை. பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று
புள்ளும் சிலம்பினகாண் போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய்.

14. உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூம்பின
காண் செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்.
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய்.

15. எல்லே இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின், நங்கைமீர்! போதர்கின்றேன்
"வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!"
"வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!"
"ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?"
"எல்லோரும் போந்தாரோ?" "போந்தார். போந்து
எண்ணிக்கொள்"
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. நாயக னாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப் பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில்காப் பானே! மணிக்கதவம் தாள்திறவாய்
ஆயர்சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

17. எம்பெருமான! நந்தகோ பாலா! எழுந்திராய்
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே! குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய்.

18. உந்து மதகளிற்றன் ஓடாத தோள்வலியன்,
நந்தகோ பாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்
வந்தெங்கும் கோழி அழைத்தனகாண் மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாட,
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19.குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்
மைத்தடங் கண்ணினாய்! நீ உன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ ஒட்டாய்காண்.
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்,
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய்.

20.முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்
செப்பம் உடையாய்! திறலுடையாய்! செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்
செப்பன்ன மென்முலை செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்
உக்கமும் தட்டொளியும் தந்துஉன் மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய்.

21.மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்
ஊற்றமுடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாதுவந்து உன்னடிபணியு மாபோலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. அங்கண் மாஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கமிருப் பார்போல் வந்துதலைப் பெய்தோம்
கிங்கிணி வாய்ச் செய்த தாமரை பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்,
அங்கணி ரண்டும் கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய்.

23. மாரிமலை முழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரியசிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து,
வேரிமயிர் பொங்க எப்பாடும் பேர்ந்துதறி,
மூரிநிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்.
போதருமா போலேநீ பூவைப்பூவண்ணா! உன்
கோயில்நின்றும் இங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரியசிங் காசனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய்.

24. அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி,
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி,
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி,
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,
குன்று குடையா எடுத்தாய்! குணம்போற்றி,
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி,
என்றென்று உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம், இரங்கேலோ ரெம்பாவாய்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25. ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர,
தரிக்கிலா னாகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில்
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

26. மாலே! மணிவண்ணா! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை யெல்லாம் நடுங்குமுரல்வன
பாலன்ன வண்ணத்துள் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே,
சாலப்பெரும் பறையே, பல்லாண் டிசைப்பாரே.
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய்.

27. கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா! உன்தன்னை
பாடிப் பறைகொண்டு யாம்பெறும் சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாம் அணிவோம்
ஆடை உடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவார
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28.கறவைகள் பின்சென்று கானம் சேர்ந்துண்போம்
அறிவொன்று மில்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவிப் பெறுந்தனைப் புண்ணியம் யாம் உடையோம்
குறைவொன்று மில்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர ழைத்தனவும் சீறி யருளாதே,
இறைவா, நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய்.

29.சிற்றம் சிறுகாலே வந்துன்னைச் சேவித்துன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள் கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்திற் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம் உனக்கே நா மாட்செய்வோம்
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

30.வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனைத்
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட ஆற்றை, அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே
இங்கிப் பரிசுரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையின் இலக்கணம் போர்க்களத்தை உருவாக்கும் வார்த்தைகள்

பாரதப் போர் நிறைவு பெற்றது. திரௌபதை உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் தனக்கு மிகவும் வயதானதைப் போல உணர்ந்தாள். அஸ்தினாபுரம் நகரைச் சுற்றி கைம்பெண்கள் அதிகமாக இருந்தனர். ஒரு சில ஆண்கள் மட்டுமே தெருக்களில் தென்பட்டனர். ஆதரவற்ற நிலையில் இருந்த பிள்ளைகள் பலரும், வீதிகளில் சுற்றித் திரிவதைக் கண்டு திரொபதை மனம் வருந்தினாள். ஒரு போர்க்களம் மக்கள் வாழ்வை புரட்டிப் போட்டுவிட்டதை அவள் உணர்ந்தாள். அஸ்தினா புரத்தின் அரண்மனையில் நின்று ஒரிடத்தை வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அப்போது அவள் நின்ற அறைக்குள் நுழைந்தார், கிருஷ்ணர். அவரைக் கண்டதும் ஓடோடி வந்து அவர் பாதம் பணிந்து வணங்கினாள். கிருஷ்ணர், அவளின் தலையை தொட்டு ஆசீர்வதித்தார். திரௌபதையோ அழத் தொடங்கினாள். திரௌபதை ஆசுவாசப்படுத்திக் கொள்ள நேரம் கொடுத்த கிருஷ்ணர், அங்கிருந்து விலகி ஒரிடத்தில் அமர்ந்தார். பின்னர் அவளிடம் கேட்டார், "திரௌபதை என்ன நடந்து விட்டது?"

"ஒன்றும் நடக்கவில்லையே கிருஷ்ணா!" என்று விரக்தியாக பதிலளித்தாள், திரௌபதை.

கிருஷ்ணரோ, "விதி கொடூரமானது பாஞ்சாலி. நாம் நினைப்பது போல் வேலை செய்யாது! அது அதன் போக்கில் அதனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களைச் செய்கிறது. முடிவுகளையும் மாற்றுகிறது. நீ பழிவாங்க நினைத்தாய்.. அதில் வெற்றியும் பெற்றுவிட்டாய். உன் பழி வாங்கல் முடிந்தது. துரியோதனனும், துச்சாதனனும் மட்டுமல்ல, கவுரவர்கள் அனைவரும் மடிந்துவிட்டனர். நீ மகிழ்ச்சியாக இருக்க வேண்டும்!" என்றார்.

"சகோதரா.. என் காயங்களை ஆற்ற வந்தீர்களா? அல்லது அதை இன்னும் கிளறி புண்படுத்த வந்தீர்களா?" என்று கோபமாக கேட்டாள், திரௌபதை.

கிருஷ்ணரிடம் என்றும் மாறாத புன்னகை உதித்தது. "திரௌபதை உண்மை நிலையை உனக்கு உணர்த்தவே வந்தேன். எல்லாம் நமது தொலைநோக்கு பார்வையற்ற செயல்களின் விளைவு என்பதை உணர்த்த வந்தேன்" என்றார்.

"இப்போது என்ன சொல்ல வருகிறீர்கள் கிருஷ்ணா.. அனைத்துக்கும் நான்தான் பொறுப்பா?" என்றாள், திரௌபதை.

"இல்லை திரௌபதை. நீ மட்டுமே காரணம் இல்லை. ஆனால், உன் செயல்களில் நீ கொஞ்சம் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டிருந்தால், இவ்வளவு துன்பங்கள் நேர்ந்திருக்காது"
"நான் என்ன செய்திருக்க முடியும் கிருஷ்ணா?"

"நீ நிறைய செய்திருக்க முடியும் பாஞ்சாலி. உனது சுயம்வரம் நடந்தபோது கர்ணனை அவமானப்படுத்தாமல், போட்டியில் கலந்துகொள்ள வாய்ப்பளித்து இருந்தால், ஒருவேளை முடிவு வேறுவிதமாக இருந்திருக்கக் கூடும். குந்தி உன்னை ஐந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருக்கு மனைவியாகும்படி கட்டளையிட்டதை, ஏற்றுக் கொள்ளாமல் இருந்தாலும், முடிவு வேறுவிதமாக இருந்திருக்கும். உன் அரண்மனையில் துரியோதனனை 'பார்வையற்றவரின் மகன்கள் குருடர்கள்' என்று அவமதித்தாய். அவ்வாறு நீ சொல்லாமல் இருந்திருந்தால், துரியோதன சபையில் உனக்கு நேர்ந்த அவமானத்தை தவிர்த்திருக்கலாம்.

நம் வார்த்தைகள் கூட, பின்னால் நடக்கும் சில விளைவுகளுக்கு பொறுப்புதான் திரவுபதி. பேசுவதற்கு முன் ஒவ்வொரு வார்த்தையையும் எடைபோடுவது மிகவும் முக்கியமானது. இல்லையெனில், அதன் தீய விளைவுகள் உன்னை மட்டுமல்ல, உனது சுற்றுப்புறத்தையும் மகிழ்ச்சியற்றதாக ஆக்கிவிடும். பற்களில் விஷம் இல்லாமலேயே, பேசும் வார்த்தைகளில் விஷத்தைக் கக்கும் ஒரே இனம் மனித இனம்தான். இப்போது உனக்கு புரிகிறதா திரௌபதை?" என்று தன்னுடைய விளக்கத்தை அளித்தார், கிருஷ்ணர்.

நாம் எப்போதும் வார்த்தைகளை புத்திசாலித்தனமாக பயன்படுத்த வேண்டும். யாருடைய மனதையும் நம் வார்த்தைகள் புண்படுத்திவிடக்கூடாது என்று திரௌபதை உணர்ந்துகொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோவிலூரும் மரண சடங்கும்

*திருப்பதி அவர்களின் ஆத்மா சாந்தி அடையட்டும்*

மாய உலக வாழ்க்கையிலே
மனிதப் பிறப்பே உயர் பிறப்பு
மேலாம் மோட்ச வழியுடைய
விந்தை உலகமே நிலைக்களமாம்

பேரானந்த பெருவாழ்வில்
புகுந்திர் அம்மா பெருந்துயரம்
தீயில் வெந்து என்ன பயன்
தேவலோக வாழ்வு பெற்று

ஞானா மிர்த நிலை அடை
நாம் வாழ்தி வணங்குகின்றோம்

## சடங்கு

எமது உயிர் பிரிந்தவுடன் என்ன செய்ய வேண்டும் என்பதை சொல்ல ஒரு புத்தகம் வேண்டும் இருந்தும் சில சடங்குகள் எதற்காக நடைபெறுகின்றது என நாம் தெரிந்து வைத்து கொள்ளவேண்டும்.

உயிர் பிரிந்த பின் உடல் புதைத்த பின்பும் எரிக்கும் முன்பும் ஏன் நீர்க்குடம் சுமந்து வருகின்றார்கள் அதை மூன்றுமுறை சுற்றுகின்றார்கள் மூன்றுமுறை துழை இடுகின்றார்கள் காரணம் எல்லாம் இந்து மதம் சிறப்பாக சொல்லி இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் இறந்த உடன் நாம் பூமியில் செய்த பாவத்திற்கான சிரமத்தை அனுபவிக்க எமது ஆத்மா தயார் ஆகின்றது அதில் முக்கியமாக மூன்று லோகங்களை தாண்ட வேண்டும் நரகம், ரௌரவம், மகாரௌரவம் என்னும் மூன்றுக்கும் அனுப்பப்படுவோம் அங்கு ஒரு சொட்டு தண்ணீரும் கிடையாது அதில் இருந்து ஆத்மாவுக்கு தண்ணீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக பெரியவர்களின் நம்பிக்கை அதுதான் இந்த சடங்கு.

ஒரு குழந்தை பிறக்கும் போது தாயின் பன்னீர் குடத்தில் துளைகள் ஏற்படுவதாகவும் அதன் பிறகே குழந்தை வெளிவருவதாகவும் கூறப்படுகின்றது. நாம் எப்படி பிறந்தோமோ அப்படியே போகிறோம் என்பதை சொல்வதற்காக இந்த சடங்கு என்று கூறப்படுகின்றது ஒரு புத்தகம் எழுதினால் தான் மரண சடங்கு கிரியை எல்லாவற்றையும் சொல்லலாம் இதுஒரு சிறு குறிப்பு.

"எல்லாம் சிவமயம்"

## தாயாருக்கு மரணச்சடங்கின் போது பட்டினத்தார் பாடிய பாடல்

1) ஐயிரண்டு திங்களாய் அங்கமெலாம் நொந்து பெற்றுப்
பையலென்ற போதே பரிந்தெடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி?

2) முந்தித் தவம் கிடந்து முந்நூறு நாள் - சுமந்து
அந்திபகலாச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்தென்னைக் காதலித்து முட்டச் சிறகிலிட்டுக்
காப்பாற்றி சீராட்டும் தாய்க்கோ விறகிலிட்டுத் தீமூட்டு வேன்?

4) நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்திமுலை
தந்து வளர்தெடுத்துத் தாழாமே - அந்தி பகல்
கையிலே கொண்டென்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யிலே தீமூட்டுவேன்?

5) அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசையிட்டுப் பார்த்து மகிழாமல் - ருசியுள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மானே என அழைத்த வாய்க்கு?

6) அள்ளி இடுவது அரிசியோ? தாய் தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ? கூசாமல் மெள்ள
முகம்மேல் முகம்வைத்து முத்தாடி "என்றன்
மகனே" என அழைத்த வாய்க்கு

7) மாதா உடல் சலித்தாள் வலிவினையேன் கால்சலித்தேன்
வேதாவும் கைசலித்து விட்டானே - நாதா
இருப்பையூர் வாழ் சிவனே இன்னம்ஓர் அன்னை
கருப்பையூர் வாராமற் கா

கலிங்கத்து உறவு ஒன்று இறைபதம் அடைந்த செய்தி ஆறா துயர்
ஆண்டவனை பிரார்த்திக்கின்றோம்.
இவருடைய ஆத்மா சாந்தி பெறட்டும்

ஓம் சாந்தி

தொகுப்பு
கோவிலூர்
எதிர்.உதயன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தான்தோன்றுமீசுரர் பதிகம்

க.உ. சின்னவப் புலவர் - செட்டிபாளையம்

(29.01.50ல் பாடப்பட்டது)

1. கைலாசம் உறைந்துமணிமேடை மீதில்
காரிகையோடமர்ந்திருக்கும் காலகாலன்
அகிலாண்டமான சிவஒளியாய் நின்றாய்
அரகரா எனும் நாமமான மூர்த்தி
பகலுகின்ற முனிஇருஷி தேவர்
சூழப் பக்கமதில் கணநாதர் மகிழ்ந்துபோற்ற
தலமேவு கொக்கட்டிச்சோலை வாழும்
தற்பரனே தான்தோன்றும் ஈசாபோற்றி -

2. கானகத்தில் வாழ்கின்ற வேடனான
கண்ணப்பனார் தனக்கு கண்ணை யீந்தாய்
மாநகரில் மாணிக்கவாசகற்கு
வன நரியை வாகனமாகச் செய்தாய்
மாடேறும் ஆசனாய் பேரெடுத்து
மார்க்கண்டன் தனக்கு வரமும் ஈந்தே
சீரேறு கொக்கட்டிச்சோலை வந்தேன்
செல்வமே தான்தோன்றும் தேவா போற்றி -

3. கிருபைவைத்து உமையவளை யிடமேவைத்து
கெங்கைதனை தலையில் வைத்தரவம் பூண்டு
அருள்மேவும் கொன்றைமலர் மாலை ஆட
அம்பலத்தில் அசைந்தசைந்து ஆடும்தேவே
பெருமைபெற்ற அசுரர்களை அழிக்கவேண்டி
பிள்ளையெனும் வேலவரை ஏவிவிட்டாய்
அருள்மேவும் கொக்கட்டிச்சோலை வாழும்
அப்பனே தான்தோன்றும் தேவா போற்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. கீழோகம் மேலோகம் எல்லாம் நீயே
கேட்டவரம் யாவருக்கும் கொடுப்பாய் நீயே
சாலோக சாயூசியம் அளிப்பாய் நீயே
தாங்கொணா வறுமை துயர் தீர்ப்பாய் நீயே
நாள்தோறும் உன்கோயில் பழிபடுத்து
நல்ல வரம் பெற்றதனால் நாங்கள்தாமும்
தாள்வில்லா கொக்கட்டிச்சோலை வாழும்
சங்கரா தான்தோன்றும் ஈசாபோற்றி -

5. குஞ்சரனை ஈன்றெடுத்தாய் உலகோர் போற்ற
குமரனையும் பயின்றமரர் பகையைத் தீர்த்தாய்
கஞ்சனைக் கொன்றோன் உனைத்தேடிக்
காணவொண்ணா பரஞ்சோதியாகி நின்றாய்
செஞ்சரணம் பணியன்பர் முத்தர் முன்பு
ரிஷி முன்பும் தோன்றியே அருளைக்காட்டி
தஞ்சமென்று கொக்கட்டிச்சோலை வந்தேன்
தற்பரனே தான்தோன்றும் ஈசாபோற்றி -

6. கூரிய வேலாயுதனார் வனத்தில் சென்று
குறமாதை தனக்குறவாக்கிக் கொண்டு
வீரியத்தோடேகி வைகை அடைக்கவேபோய்
மீனவன் கை அடிபட்ட வெட்கத்தாலே
பாரியதோர் வில்லதனால் அடிபட்டேங்கி
பாசுபதம் ஈந்தனையோ பார்த்தனுக்கு
காரியமாய் கொக்கட்டிச்சோலை வந்தேன்
கடவுளே தான் தோன்றும் ஈசாபோற்றி -

7. கெங்கைதும்பை மணிபூண்டு மதனைச் சுட்டாய்
கொக்கரித்தாய் முப்புரத்தை தகனம் செய்தாய்
பங்கமுறு சமணரை வெற்றிகொண்டாய்
பகருகின்ற சுந்தரருக்கு அருளே செய்தாய்
எங்கெங்கும் பரந்த ஒளியாகி நின்றாய்
இடர் அகற்றி அடியார்க்கு இரங்கும் தேவே
தங்குகின்ற கொக்கட்டிச்சோலை வந்தேன்
தற்பரா தான்தோன்றும் ஈசாபோற்றி -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. கேட்டவரம் கொடுப்பதற்கு நீயிருக்க
கிட்டவந்து பெறுவதற்கு நானிருக்க
வாட்டமுடன் கொக்கட்டிச்சோலை தன்னில்
மாதேவா உன் சந்நிதியை வலமாய் வந்து
பார்த்தபொழு துமையோடு நீயிருக்க
பக்கமெலாம் ஆலாத்தி ஏந்திநிற்க
காத்திருந்து கொக்கட்டிச்சோலை வந்தேன்
கடவுளே தான்தோன்றும் ஈசாபோற்றி -

9. கைதனிலே சூலமொடு மானைக்கண்டேன்
கருணைபுரி மூன்று திருக்கண்ணைக் கண்டேன்
மெய்யிலே திருநீற்று ஒளியைக் கண்டேன்
வெண்புலித்தோல் உடைகண்டேன் மேனிகண்டேன்.
பையரவும் சடைமுடிமேல் மாலைக்கண்டேன்
உன்பதிவந்து போற்றும் அடியார்கள் கண்டேன்
உய்யவந்தேன் கொக்கட்டிச்சோலை தன்னில்
உத்தமனே தான்தோன்றும் ஈசாபோற்றி -

10. கொடிகண்டேன் முடிகண்டேன் கோவில் கண்டேன்
குலவுதிருக் கோபுரத்தின் அழகைக் கண்டேன்
படியேறி மணி மதில் சூழ் வீதிகண்டேன்
பக்கமெலாம் அமர்ந்திருக்கும் கோவில் கண்டேன்
வடிவுடைய சித்திரத்தேர் மீதில் ஏறி
மங்கை சிவகாமியுடன் வரவும் கண்டேன்
கருதரிய கொக்கட்டிச்சோலை வாழும்
கடவுளே தான்தோன்றும் தேவா போற்றி -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11. கோடொடித்து மலைதன்னில் வரையச் சொல்லி
குஞ்சரனை ஈன்றெடுத்தாய் உலகோர்போற்ற
ஆடடித்து பலிகொள்ளுங் காளிதன்னை
அங்கங்கு நிறுத்திவைத்தாய் உன் அருளைக்காண
தேடரிய வீரனைக் கொன்றே
தக்கன்யாகத்தை அழிக்கச் செய்தாய்
தேடரிய பூஞ்சோலை புகுந் தொளித்தாய்
சோதியே தான்தோன்றும் ஈசாபோற்றி -

12. கௌவ்வை தமிழ்மொழிமாதர் குரவையார்ப்ப
கவிவாணர் புகழ் தோற்றிக் கவிகள் பாட
வைவிழிசேர் அரம்பையர்கள் நடனமாட
மாதவத்தோர் நின்று மலர் சொரிந்துபோற்ற
கைவளையலிடுமாதர் சூலமேந்தி
கவரியிருபக்கமும் அசைந்து தோற்ற
தேடரிய கொன்றை மலர் மாலை சூடும்
சிவ சிவா தான்தோன்றும் ஈசா போற்றி -

13. இக்கணமே உன்பதியில் வீழ்ந்து
இரவு பகல் அழுத சத்தம் கேளாதோ
தக்க சிறுத் தொண்டருக்கு மகவைக்கொன்றதினால்
மேலான பதவி தன்னை கவரச் செய்தாய்
எக்காலமும் பூசைதவறா வண்ணம்
இறைஞ்சும் அடியார்களுக்கு இரங்கும் தேவே
பக்குவமாய் உனைவந்து பணிந்து நின்றேன்
பராபரனே தான்தோன்றும் ஈசாபோற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோட்சமாலை

விநாயகர்

திருச்சிற்றம்பலம்

அரியானைக் கணபதியே அரனார் சேயே
ஐங்கரனே பங்கையம் சேர் உமையாள் கண்ணே
கரிமுகனே கற்பகமேகசடறுத்து
கவியதற்கு முன்னிற்க வேண்டுமையா
பரிவொடு மோட்சவழிப் பாதைகான
பாழுடம்பு விட்டகன்று பறந்ததையா
தெரியாத சீவனுக்காய் துணையாய் நின்று
திருமாலின் பதம்சேர அருள்செய்வாயே.

அருள் செய்வாய் குஞ்சரனே அமரரோடு
அடியாரின் ஆத்மாவை அடையச் செய்து
பெருவழியில் இடைநின்று மோட்சப் பாதை
பிழைபொறுத்து சீவனுக்கு காட்டுமையா
கருணை கொடு கற்பகமே கழிறேமாலின்
கண்ணரிட வைகுந்த வளியில் நின்று
இருளகற்றி இந்திரபதி புகுதற்பாதை
இன்பமுடன் அழித்தருளப் போற்றினோமே

போற்றி ஜெககணநாதா போற்றி போற்றி
பொன்மலர்தாழ் இணையடிகள் போற்றி போற்றி
ஆர்ப்பரித்து இச்சீவன் அலையவண்ணம்
ஆனைமுக வாரரணே அமரர் வாழும்
ஏற்றமுறு வைகுந்தம் போகும் பாதை
இன்பமுடன் காட்டுமைய அன்புவைத்து
சீற்றமுடன் உமைத் தொழுதோம் சித்தி முத்தித்
திருக்கயிலாய வீடடைய அருள் செய்வாயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகாசக்தி

அம்பிகை உமையேருத்திரி அச்சுதன் தங்கையாளே
எம்பிரான் தேவநீலி ஈஸ்பரி கெவுரிமாரி
கொம்புடை மகிடாசூரன் கூர்பலி இட்டகாளி
சந்திரப்பதிமா வைகுந்தம் தாயேநீ காட்டுவாயே

சாம்பவிதுர்க்கை வாலைச்சாத்தகி சுடலைநாச்சி
பாம்பணி பராபரத்தி பகைவரை அழித்த சூலி
நாராயணிவாரகி தேவிநலமருள் உருத்திராணி
புவனை அபிராமிமோட்ச புகுவழி காட்டுவாயே

ஓம்சக்தி உலகமாதா உன்னடி தஞ்சம்மா
வாமவதேவநீல வண்ணரின் பதியைநாடி
ஊன்னுடல் விடுத்துச் சீவன் உடன்னெதிர் வந்தம்மா
கானெடு காளித்தாயே காட்டுவாய் வைகுந்தம் நீயே

## சிவன்

அத்தனே அரனே ஆதிஅமலனே உமையாள்பங்கா
பித்தனே பிரானே தில்லைப்பெரு நடமிட்டபாதா
சுத்தவெண்ணீறு பூசிச்சுடலையில் ஆடும் சோதி
கர்த்தனே கயிலைவாசா கடவுளே நமசிவாய

கர்பனைக் கடந்தசோதி கதிருடல் விட்டுச்சீவன்
சொற்படி இயமதூதர் சுருக்கிட்டு கொண்டுவந்தார்
சித்தமாய் உருத்திராயாயிச் சீவனை நரகில்புக்கா(து)
நற்பதி மோட்சவீடு நல்குவாய் நமசிவாய

சங்கரா சம்போதேவா சதாசிவா நீலகண்டா
திங்களும் அரவம் குடும்சிவசிவா இவரின் ஆத்மா
தங்குகள் தடைகள்யின்றி தட்சணம் அணைத்துக் கொண்டு
அங்கு உன்பாதம் போற்ற ஆண்டருள் நமசிவாயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முருகன்

தேவர்கள் இடுகண்தீர்த்த செந்தியம் பதியின்வாழ்வே
தாமதம் இன்றிச்சீவன் தனிவளி வந்ததையோ
வேலவா மோட்சவீடு வித்தமமாம் பதியைக் காட்டி
காலனார் கொடுமை செய்யாக் கந்தனனே காத்திடாயே

சரணமே சரணம் செவ்வேள் சரணபவனே சிவன்
பிரணவ ஒலியினோடு பிரமனின் படைப்பைவிட்டு
அரகரமுருகா வந்துன் அடைகலம் சேர்ந்ததையோ
வரமருள் வடிவேலோனே வைகுந்தம் அருள் செய்வாயே

அழகனேகுமரா ஆண்டிஅறுபடை உறையும் ஞானப்
பழம்பெரும் கனியே மோட்சப் பதிதனை அடைந்தசீவன்
உன்கழலடி பணிந்துகொண்டு கடைத்றே முத்திநல்காய்
இளநகை அயில்வேல்கொண்ட ஏந்தலே போற்றி போற்றி

## நாரயணன்

அரிகரிராம ராமாஅச்சுதா அசோதை புத்திரா
சிறிநமோ கிஸ்னதேவா திருவடி அழந்தபாதா
கருமுகில் மேகவண்ணா கருடவாகனனே கண்ணா
முரகரிமுகுந்தா மோட்ச முத்திவீடளித்திடாயோ

மாதவா வெங்கடேசா மாயனே வைகுந்தவாசா
ஆதவா இவரின் ஆத்மா அடைக்கலம் உமதுதாழில்
நீதனே நீலவண்ணா நெடியவா மோட்சவீடு
மதிசூதனேன் நந்தகோபாலா துணைபுரிந் தளித்திடாயோ

பூதகிமுலைப் பாலுண்ட புருசோத்தம தேவதேவா
ஜனாகிமணாளா றங்காயாதவ குலதிநீதா
பூமகள்கண வாமுத்தி மோட்சநற் பரகதிநல்கி
தேவர்கள் தங்களோடு திருக்கயிலாயம் சேர்ப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூமாதேவி

பூமிமாதேவியம்மா உன்பொன்னடி சரணம்தாயே
தாமதமின்றி இந்த சடலத்தை ஏற்றிடம்மா
மேலும் இவ்வாத்மா தன்னை விரைந்துநீ அழைத்திடாது
நாமிநின் சரசகோபால் சன்நிதி சேர்த்திடாயே

அடைக்கலம் அடைக்கலம் காண் அம்மையே பூமிமாதா
உடலது உந்தன் பாரம் உயிருமே மோட்சவீடு
இடைவெளி தடுமாறாது இன்முகம் கருணைகூர்ந்து
அம்மையே சடலந்தன்னை அன்புடன் ஏற்றிடாயே

அடைக்கலம் உனக்கேஅம்மா ஆணவமாய் கைக்கூடு
படைத்தனன் பிரமதேவன் பழுதின்றி மனிதனாக
விடைகிடைத்தது சீவனுக்கு விண்ணில்நல் மோட்சவீடு
படையொடு பாடைசேர்த்தோம் பாமுடம் பேற்றிடாயே

## சுபம்

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது யிர்கள்வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

தென்னாடுடைய சிவனே போற்றி
என்னாட்டவர்க்கும் இறைவா போற்றி
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க
இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!
சுபமங்களம்
வைகுந்த மோட்சமாலை முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோர் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

# மரண அறிவித்தல்



| மண் மகிழ | கண் நெகிழ |
|---|---|
| 1974 | 2025 |
| 03 | 01 |
| 03 | 01 |

கோவில்போரதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர். திருமதி.திருப்பதி மகேந்திரன்**

**அவர்கள் 2025.01.01 ம் திகதி புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.**

அன்னார் மகேந்திரன் அவர்களின் அன்பு மனைவியும்
காலஞ்சென்ற குஞ்சித்தம்பி அல்லிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும்
காலஞ்சென்ற நாகமணி சுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகளும்
தனுஷியா, அனோஜா, மதுஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும்
ஜெயசீலன், சந்திரா, நேசமலர் ஆகியோரின் அன்புச் சகோதரியும்
கலைச்சனா, ரஜிதா, பரமேஸ்வரன், லோகிதன், சுவர்ணா, கர்ஸ்மின், கிருஷிவன், யுகிவர்ஷன்
ஆகியோரின் பாசமிகு மாமியாரும்
கோபாலபிள்ளை, ரதியானந்தம், சுகிர்தா, விநாயகராசா, ஜீவா, கிரியங்கா,
காலஞ்சென்ற திருவம்மைபிள்ளை, புஸ்பவதி, திருமைராசா, காலஞ்சென்ற கோபாலரெத்தினம்,
சிவகுருநாதன், பாஸ்கரன், தங்கேஸ்வரி, சாந்தினி ஆகியோரின் அன்பு மைத்துனியும்
காலஞ்சென்றவர்களான இளையதம்பி பாக்கியம், சின்னத்தம்பி பத்தினாச்சி
கதிர்காமதம்பி, யோகம்மா, மஞ்சணப்பிள்ளை ஆகியோரின் அன்பு பேத்தியும்
வெற்றிவேல், புனிதவதி, காலஞ்சென்றவர்களான சந்திரபிள்ளை, சாமித்தம்பி, அழகம்மா,
திருஷ்ணபிள்ளை, பஞ்சவர்ணம், மகேஸ்வரி ஆகியோரின் பெறாமகளும்
மதிவதனி, இராஜமோகன், மதன் (வண்டன்) ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும்
சிவலிங்கம், காலஞ்சென்றவர்களான சிவனேசராசா, எதிர்மன்னசிங்கம், திருச்செல்வம்,
மற்றும் புவனேந்திரன், விஸ்வலிங்கம், பாக்கியராசா (பிரான்ஸ்), பத்மாவதி,
யோகேஸ்வரி, சுலோசனா, மேகலா, சோதிமலர் ஆகியோரின் மருமகளும்
சுதர்மினா, சுதர்சனா, கானுஜன், சிவானுஜன், புவிேராதன், தசாங்கனி, பிறந்சனா
ஆகியோரின் பெரியம்மாவும்
கஸ்மிகா, விஜாஸ்மிகா, கரிஸ் ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் புதவுடல் 2025.01.03 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00
மணியளவில் அன்னாரின் இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு
பொறுகாமம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

**தகவல் : அன்னாரின் குடும்பத்தினர்**

விக்கி பிறிண்டர்ஸ் கோவில்போரதீவு - 0772977543



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1974 | 2025 |
| 03 | 01 |
| 03 | 01 |

## அமரர் : திருமதி.திருப்பதி மகேந்திரன்

உறங்காத உள்ளமொன்று உணர்வோடு போராடி
உறைவிடம் தேடியிங்கே உயிர்மடி சேர்ந்ததெங்கே
அலையலையாய் காரணங்கள் ஆயிரமாய் குவிந்தாலும்
காலனவன் கவர்ந்திட்ட உன் இன்னுயிரை மீட்டிடுமோ!

பற்றோடு பாசமதை நட்போடு பகிர்ந்தளித்து
மெய்யான அன்புதனில் எல்லோர்க்கும் இரங்கி நின்றாய்!
பொய்யான வாழ்வென்று புறப்பட்டு போனதெங்கே
அடி மனம் உருகுதம்மா கண்ணில் நீர் பெருகுதம்மா!

எண்ணம்தான் இறைஞ்சுதம்மா!
உன் ஆத்மா சாந்தி திண்ணமம்மா!
உதிர்வுகள் உடல்களுக்கு மட்டுமானது
பதிவுகள் பாசமனங்களில் நிரந்தரமானது

உறவுகளை அன்பால் இறுக்கிக் கொண்டவளே!
ஆண்டவன் பாதங்கள் மட்டுமல்ல
எம் இதயங்களும் என்றென்றும்
உன் ஆத்மாவின் இருப்பிடம்.

**2016 O/L Batch**
மட்/பட்/கோவில்போரதீவு விவேகானந்தா மகா வித்தியாலயம்.

விக்கி பிறின்டர்ஸ் கோவில்போரதீவு - 0772977543



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

மண்மகிழ
1974
03
03



கண்நெகிழ
2025
01
01

## அமரர் : திருமதி.திருப்பதி மகேந்திரன்

செங்கதிரோன் ஒளியூட்ட செந்நெல் வளம் கொழிக்கும்
பங்காபுகழ் பல கல்விமான்களின் வதிவிடமாம் -- பேரேறுதீவினில்
சீர் பெற்று சிறப்புடனே வாழ்ந்த தாயார் திருப்பதி
போன துயர் மறைந்திடுமோ எமை விட்டு

ஆலய தொண்டுகளில் அறப்பணியாற்றி
பரிவுடனே பார்போற்ற வாழ்ந்தாய்
ஊரோடு உறவாடி ஊர் வளர்ச்சிக்காய்
பிள்ளைகளையும் பேரக்குழந்தைகளையும் உவந்தளித்தாயே

உள்ளம் கோணாவண்ணம் இடித்துரைப்பாய் நற்சொற்களை
விட்டவன் அழைத்தானோ கட்டுடல் தன்னை விட்டு
காற்றினில் தவழ்ந்து சென்று விண்ணகம் சேர்ந்து விட்டீர்
உள்ளம் கதறுகின்றதம்மா உனை நினைத்து

ஊரோடு உதயதாரகையும் பேர் பெற்ற பெருமகள் இழப்பை எண்ணி
உள்ளம் குமுறுகின்றது உன்னை எப்போது இனி காண்பது
வெற்றிலையில் முகம் பார்க்கும் வேழமுகத்து விநாயகரின் திருவடியில்
உன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

பிரிவால் வாடும்
உதயதாரகை கலை விளையாட்டுக் கழகம்
கோவில்போரதீவு.

விக்கி பிரிண்டர்ஸ் கோவில்போரதீவு - 0772977543



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் காணிக்கை

மண்ணில்
1974
03
03



விண்ணில்
2025
01
01

## அமரர் : திருமதி.திருப்பதி மகேந்திரன்

பேரருளாளே பேர்பெற்று விளங்குகின்ற
போரேறு தீவின் பெருந்தன்மை மேலோங்க
பெருமாதா பிரிந்த செய்தி கேட்டு
ஏங்கித் தவிக்க இடமாக்கி விட்டானே!

காலன் அவன் உன்னை அழைத்திடவே
ஓலமிட்டு அழுகின்றன உன்னுடைய உறவெல்லாம்
தேடியும் காணோமே திருவழகு முகமதனை
நாடி நோகின்றோம் யமனையும் சினந்து கொண்டு

விதியென்று எழுதி விண்ணுலகு எமை அழைக்கும்
கடுகி ஓலை வரும் கருத்தெறிக்க ஓடிடுவோம்
இதுவே மனிதனின் இன்பத் துயரமாம்
பார்போற்ற வாழ்ந்தாலும் பாதியிலே செல்ல வேண்டும்

பாரளந்த பரமனே பண்புமிக்க உள்ளவரே
ஆதி சிவனாரே ஆண்டவரே எம் இறைவா
எமை விட்டு பிரிந்த பெருந்தாயின்
ஆத்மாவை உன்னடியில் உறங்க வைப்பாய்

இவ்வண்ணம்
இளைஞர் எழுச்சி ஒன்றிய கலை விளையாட்டுக் கழகம்
கோவில்போரதீவு.

விக்கி பிறிண்டர்ஸ் கோவில்போரதீவு - 0772977543



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விக்கி பிறின்டர்ஸ் கோவில்போரதீவு - 0772977543

## 31ம் நாள் வீட்டுக் கிருத்திய அழைப்பும், நன்றிநவிலலும்.

31.01.2025 வெள்ளிக்கிழமை

மண்ணகம் 03 • 03 • 1974



விண்ணகம் 01 • 01 • 2025

**அமரர்.திருமதி. திருப்பதி மகேந்திரன்**

இளங்கோ வீதி,
கோவில்போரதீவு.

## அழைப்பிதழ்

திரு/திருமதி/செல்வி :........................................................

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப் படும்"

கடந்த 01.01.2025 அன்று பரந்தாமன் பாதமதில் சங்கமித்த எங்கள் அன்புத் தெய்வம்

**அமரர்.திருமதி.திருப்பதி மகேந்திரன்**

அவர்களின் 31ம் நாள் வீட்டுக்கிருத்திய கிரியை நிகழ்வுகள் எதிர்வரும் 31.01.2025 **வெள்ளிக்கிழமை** எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம், தாங்களும் இந்நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இளங்கோ வீதி,
கோவில்போரதீவு.
தொ.பே : 075 4641 505

இவ்வண்ணம்
குடும்பத்தினர்

## நன்றி நவில்கின்றோம்

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு"

கடந்த 01.01.2025 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்ப ஒளி விளக்கான

**அமரர்.திருமதி.திருப்பதி மகேந்திரன்**

அவர்களின் மரணச் செய்தி கேட்டு

- எமது இல்லம் வந்து ஆறுதலும், தேறுதலும் கூறிய அன்பு உள்ளங்களுக்கும்
- அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும்
- பதாதைகள், கண்ணீர் அஞ்சலிகள், மலர்மாலைகள், மலர் வளையங்கள் மூலம் அஞ்சலி செய்தோருக்கும்
- தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாகத் துயர்பகிர்ந்து கொண்டோருக்கும்
- இறுதிச் சடங்கில் கலந்து கொண்டோருக்கும்
- ஆகார வகைகள் அளித்த அன்பு உள்ளங்களுக்கும்
- அன்றிலிருந்து இன்றுவரை எம்முடனிருந்து துயர் பகிர்ந்து கொண்டோருக்கும்
- மேலும் பல வழிகளில் உதவிகள் புரிந்த அனைவருக்கும்...

எங்கள் அன்பு பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

இவ்வண்ணம்
குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரம் கூப்பி நன்றி மலரால் அர்ச்சிக்கின்றோம்


"என் நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்
உய்வில்லை செய் நன்றி கொன்றமர்க்கு"

எங்கள் அன்புத் தாயாரின் மரணச் செய்தி கேட்டு பொங்குதமிழ் கலாச்சார உணர்வு பொங்க புனிதம் துலங்க எங்கள் வீடு வந்து எங்களுடன் இணைந்து துக்கம் அனுட்டித்து எல்லாக் காரியங்களையும் இனிதாய் நிறைவேற்றி இரவு வேளைகளிலும் எம்முறவை தனிக்க விடாது எம்முடன் கண்விழித்து எமக்கு ஆறுதலளித்து உறவுகளாய், ஊரவராய், அயல்கிராமப் பற்றாளராய், நண்பர்களாய், நண்பிகளாய், இணைந்து நின்ற அன்பர்களே மற்றும் இல்லங்களுக்கு வந்து ஆறுதல் தெரிவித்து உணவு வழங்கி உபசரித்தவர்களுக்கும் தொலைபேசி ஊடாக எமக்கு இரங்கல் தெரிவித்த நல்லுள்ளங்களுக்கும் அன்பால் கனிந்து அகம் உருகி அனைவருக்கும் மனம் மகிழ்ந்து நன்றி மலர் தூவி அர்ச்சிக்கின்றோம்.

நன்றி

அன்பின்


குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது. எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது. எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காய் நீ அழுகிறாய்? எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு. எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்.

"அதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்".

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் –



விக்கி பிறிண்டர்ஸ் கோவில்போரதீவு - 0772977543

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org